# திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறை இணையதளம் துவக்க விழா

புதுச்சேரி, செப். 18–

திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறை இணையதளத்தை முதல்வர் வைத்திலிங்கம் நேற்று துவக்கி வைத்தார்.

புதுச்சேரி அரசின் திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறைக்குப் புதிதாக இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் துவக்க விழா துறையின் கருத்தரங்கக் கூடத்தில் நேற்று மாலை நடந்தது. முதல்வர் வைத்திலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இணையதளத்தைத் துவக்கி வைத்தார். அபிவிருத்தி ஆணையர் நூதன் குகா பிஸ்வாஸ் வாழ்த்தி பேசினார். திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறையின் இயக்குனர் கனகசபை வரவேற்றார்.

விழாவில் முதல்வர் வைத்திலிங்கம் பேசும்போது, 'இந்த இணையதளத்தில் தகவல்களை தினசரி 'அப்டேட்' செய்ய வேண்டும். புதுச்சேரி அரசின் பல துறைகள் தங்களது இணையதளத்தை 'அப்டேட்' செய்வதில்லை. பழைய தகவல்களே இடம் பெற்றுள்ளன. அதுபோன்ற துறைகளின் இயக்குனர்களுக்கு திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறை உடனுக்குடன் இ-மெயில் அனுப்பி தகவல்களைப் புதுப்பிக்குமாறு கூற வேண்டும்.



புதுச்சேரி திட்டம் மற்றும் ஆராய்ச்சி துறையின் இணைய தளத்தை முதல்வர் வைத்திலிங்கம் நேற்று துவக்கி வைத்தார். அருகில் அபிவிருத்தி ஆணையர் நூதன் குகா பிஸ்வாஸ், துறை இயக்குனர் கனகசபை.

நிதி சம்பந்தமான விஷயங்களை மட்டும் பார்க்காமல், பல்வேறு விஷயங்களையும் ஆய்வு செய்யலாம். உதாரணமாக நிறைய கட்டடங்கள் கட்டப்பட்டு திறப்பு விழா நடக்காமல், பயன்படுத்தப்படாமல் உள்ளது. மின்சார இணைப்பு தரப்பட்ட பலருக்கு பில் அனுப்பப்படாமல் உள்ளது. இதுபோன்ற விஷயங்கள் குறித்தும் திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறை ஆய்வு செய்யலாம்' என்றார்.

விழாவில் துறையின் இணை இயக்குனர்கள் விஜயலட்சுமி, ஷெரீப், துணை இயக்குனர் அசோகன், என்ஐசி தொழில்நுட்ப இயக்குனர் ராஜசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். திட்டம் மற்றும் ஆராய்ச்சித்துறை இணையதள முகவரி: http://pandr. puducherry.gov.in

இந்த இணையதளத்தில் புதுச்சேரி அரசின் திட்டம் தயாரிப்பு, திட்ட செலவினங்கள் போன்ற விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம். புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் ஆகிய நான்கு பகுதிகளின் தினசரி செலவினங்கள் குறித்த விபரங்களும் விரைவில் இடம் பெற உள்ளது.